கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2016/2017 (ஜுன் 2019)

**PSS 4142 இலங்கையில் யுத்தத்தின் பின்னரான சமாதானமும் சமூக நல்லிணக்கமும்**

**Peace and Post-war Reconciliation in Sri Lanka**

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி-I இல் இருந்து இரு வினாக்களிற்கும், பகுதி-II இல் இருந்து இரு வினாக்களிற்கும் எல்லாமாக நான்கு வினாக்களிற்கு விடை தருக.

## பகுதி – I

01. (i) இலங்கையில் இனமுரண்பாடு ஆயுத மோதலாக பரிணமிப்பதற்கு ஏதுவாய் அமைந்திருந்த காரணிகளை விளக்குக?

(12 புள்ளிகள்)

(ii) இலங்கையில் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் பின்னர் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் எதிர்நோக்கப்படும் சவால்களைச் சுருக்கமாக விளக்குக.

(13 புள்ளிகள்)

02. (i) யுத்தக் குற்றம் என்றால் என்ன என்பதனை வரைவிலக்கணங்களின் துணையுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

(ii) தருஷ்மன் அறிக்கை (Darusman Report) இல் இலங்கை அரசாங்கத்தினாலும், தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் யுத்தக் குற்றங்களை விளக்குக.

(13 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

(i) உலக சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் வகிபாகம்

(ii) இலங்கையில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் வகிபாகம்

(தலா 12.5x2=25 புள்ளிகள்)

## பகுதி – II

04. இலங்கையில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளைப் பரிசீலனை செய்க.

(25 புள்ளிகள்)

05. “இலங்கையில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் நல்லாட்சி அரசாங்கம் தோல்வியடைந்திருக்கின்றது.” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுக.

(25 புள்ளிகள்)

06. 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் இலங்கையில் சமாதானத்தினைக் கட்டியெழுப்புவதில் நோர்வே நாட்டின் மத்தியஸ்தம் விமர்சனத்திற்குரியதாகும். பகுப்பாய்வு செய்க.

(25 புள்ளிகள்)